செ.வெ.எண்: 223 நாள்:02.04.2018

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

பரிசு குலுக்கல் (தடை) சட்டம் 1955, பரிசு கொண்ட சீட்டுத் திட்டங்கள் மற்றும் பண சுழற்சி திட்டங்கள் / தடை சட்டம் 1978, தமிழ்நாடு பரிசு திட்டங்கள் (தடை) சட்டம் 1979 ஆகிய சட்டங்களின்படி விற்பனையை அதிகரிக்கவம், சட்டத்திற்கு விரோதமான பரிசுத் திட்டங்கள், குலுக்கல் போட்டிகள் நடத்துவது காவல்துறை நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

வணிக நிறுவனங்கள் மேற்படி சட்டங்களுக்கு விரோதமாக தங்கள் பொருட்களை விலை கூட்டியும், தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர். இதனால் நுகர்வோர்கள் விழிப்புணர்வோடு இருக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இதுபோன்ற ஏமாற்று வேலைகளை செய்யும் வணிகர்கள், வணிக நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.